

சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை ஜி.கே.எம் காலனி பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நேற்று நடைபெற்ற சென்னை வடக்கு மாவட்டக் கழக ஆதி திராவிடர் நலக்குழுவின் அமைப்பாளர் வெ.இன்பசேகரன் – திருமதி.இ.ராஜேஸ்வரி ஆகியோரின் மகன் அரவிந்த் – கீர்த்திகா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினார்.

### தூத்துக்குடியில் தனியார் பங்களிப்புடன்

# சுற்றுச்சூழலைப் பாதிக்கும் அனல்மின் திட்ட அறிவிப்புத் தேவையா?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு கேள்வி!

நெல்லை.செப்.4-.

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

2006 முதல் 2011 வரை கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் வட சென்னை, மேட்டூர், வல்லூர், உடன்குடி, தூத்துக்குடி உட்பட பல இடங்களில் 6000 MWக்கு மேல் அனல் மின் திட்டம் உருவாக்கப்பட்டு, பணிகள் முடிவடைந்து தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.2011 - 2021 வரை 10 ஆண்டு காலத்தில் புதிய அனல் மின் திட்டப்பணிகள் தொடங்கப் படவில்லை என்பது உங்களுக்கு தெரியுமா CMsir?



2021-ல் தி.மு.க.ஆட்சி பொறுப்பேற்ற போது சோலார் மூலம் சுமார் 1000 MW மின் உற்பத்தி மட்டுமே செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் நவீன சோலார் மின் திட்டத்தின் மூலம் 15,000 MWக்கு மேல் மின் உற்பத்தி செய்யப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கி தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா CMsir?

தற்போது பாரத பிரதமர் வீடுகளுக்கு சோலார் மின் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கு மானியம் கொடுத்து ஊக்குவிப்பதால், வரும் 5 ஆண்டு காலத்திற்குள் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வீடுகள் சோலார் மின் திட்ட மூலம் விரிவுபடுத்தப்பட்டு மின் தேவைகள் வெகுவாக குறைந்து மின்துறையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு உருவாகும் என்பது உங்களுக்கு தெரியுமா CMsir? தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய solar backup system மூலம் எளிதாக பல ஆயிரம் MW மின்சாரம் உற்பத்தி செய்து இரவு நேரங்களிலும் சோலார் மின்சாரம் பயன்படுத்த முடியும் என்ற நிலையில் தமிழக முதல்வர் 110 விதியின் கீழ் தூத்துக்குடியில் தனியார் பங்களிப்புடன் இரண்டு 800 MW திறன் கொண்ட சுற்றுச்சூழலை பாதிக்கும் அனல் மின் திட்ட அறிவிப்பு தேவையா? தமிழ்நாடு மின்வாரியத்தை தனியாருக்கு விற்பனை செய்ய இத்திட்டத்தை அறிவித்திருக்கிறீர்களா CMsir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

### கொளத்தூர் நேர்மை நகர் பகுதியில்

# ஒருங்கிணைந்த காவல் நிலையக் கட்டுமானப் பணிகளை விரைந்து தொடங்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை.செப்.4-

கொளத்தூர் நேர்மை நகர் பகுதியில் காவல் துறை துணை ஆணையர் அலுவலகம், அனைத்து மகளிர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம், குற்றப்பிரிவு காவல் நிலையம் மற்றும் சட்டம்-ஒழுங்கு காவல் நிலையம் ஆகியவற்றை ஒரே வளாகத்தில் அமைக்கும் திட்டத்தை நிலுவையில் வைக்காமல் விரைந்து செயல்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே.சேகர்பாபு வலியுறுத்தினார்.



சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:

கொளத்தூர் நேர்மை நகர் பகுதியில் உள்துறை செயலாளரால் காவல் துறை துணை ஆணையர் அலுவலகம், அனைத்து மகளிர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம், குற்றப்பிரிவு காவல் நிலையம் மற்றும் சட்டம்-ஒழுங்கு காவல் நிலையம் ஆகியவற்றை ஒரே இடத்தில் அமைப்பதற்கான பொறுப்பை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றிருந்தது. இதற்கான வரைபடம் உள்ளிட்ட பணிகளும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

கொளத்தூர் பகுதியில் மக்கள் தொகையும் குடியிருப்புகளும் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், குற்றச் சம்பவங்கள் தொடர்பான புகார்களுக்கு காவல்துறை விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த ஒருங்கிணைந்த காவல் நிலைய வளாகம் மிகவும் அவசியமானதாகும்.

எனவே, ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ள இந்த ஒருங்கிணைந்த காவல் நிலையக் கட்டுமானத் திட்டத்தை எந்த வித காலதாமதமும் இன்றி செயல்படுத்த வேண்டும். திட்டத்தை நிலுவையில் வைக்காமல் கட்டுமானப் பணிகளை விரைந்து தொடங்கி, மக்களுக்கு தேவையான காவல் வசதிகள் கிடைக்கும் வகையில் காவல் நிலைய வளாகத்தை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தினார்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம்,செப்.4,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (4.9.2026 வெள்ளிக்கிழமை) மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமைக் கழக பிரதிநிதிகள் என். மருதுகணேஷ், திருமதி கே.ராணி ரவிச்சந்திரன். செங்கல்பட்டு, மாவட்ட தலைமை கழக பிரதிநிதி கள் சி.என். அண்ணாதுரை எம்.பி. கோவி .லெனின் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு கூட்டம் நடைபெற உள்ளது.



இன்று (4.9.2026) காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம்,உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிகள்- என்.மருதுகணேஷ், திருமதி கே.ராணி ரவிச்சந்திரன் தலைமைக்கழக பிரதிநிதிகள் கலந்தும் இக்கூட்டம் உத்திரமேரூர் பிரியாமகாலில் நடைபெறுகின்றது.

இன்று (4.9.2026) பிற்பகல் 2.00 மணயளவில் - மதுராந்தகம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிகள் தலைமைக்கழகப் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை எம்.பி.,கோவி. லெனின் ஆகியோர் கலந்து கொள்ளும் இக்கூட்டம் முகுந்தன் மகால் கருங்குழியில் நடைபெறுகிறது.

எனவே. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய பகுதி, பேரூர். செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாநில மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டுசிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைலமயில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக்கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி மாநகர, நகர, ஒன்றிய பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்தும்

செப். 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் முப்பெரும் விழா,

கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொள்கிறார்.

